Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

நெடுவினா

1. **முன்னுரை:**
உயிரின வாழ்வின் அடிப்படை இயற்கை, நாம் நம்பியிருப்பதும் நம்மில் இருப்பதும் இயற்கையே. இயற்கையின் கூறுகளில் காற்றின் பங்கு கூடுதலானது. காற்றே எங்கும் நிறைந்திருக்கிறது. அத்தகைய காற்றின் பண்பு, மாசடையும் தன்மை, அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து இங்கே காண்போம்.
காற்றின் வகைகள்:
காற்று கிழக்கிலிருந்து வீசிடும்போது அது கொண்டலாக மாறி குளிர்ச்சியைத் தருகின்றது. மேற்கிலிருந்து அதிக வலிமையோடு நிலத்திலிருந்து வெப்பக்காற்றாக வீசுவதால் அது கோடை என்றழைக்கப்படுகிறது. பனிப்பகுதியான வடக்கிலிருந்து குளிர்ச்சியான ஊதைக்காற்றை வீசுவதால் வாடை என்றழைக்கப்படுகிறது. மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி மென்மையாக வருவதால் தென்றலாகிறது.
பயன்கள்:
காற்றின் மேலடுக்கில் உள்ள ஓசோன் படலத்தின் மூலம் கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்களைத் தடுக்கும் அரணாக காற்று விளங்குகிறது. சூரியனின் கதிர் சூட்டைத் தணிக்கும் போர்வையாகிறது. உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கிறது. தாவரத்தின் ஒளிச்சேர்க்கைக்கும், விதைகள் பரவுவதற்கும் புவியின் உயிர்ச் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்கவும் உதவுகின்றது.
காற்று மாசடைதல்:
குப்பைகள், நெகிழிப் பைகள், மெது உருளைகள் ஆகியவற்றை எரிப்பதாலும், குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டப்பட்ட அறைகள் ஆகியவற்றாலும் காற்று அதிகம் மாசடைகின்றது. மிகுதியான பட்டாசு வெடிப்பதாலும், புகை வடிகட்டி இல்லாமல் தொழிற்சாலைகள் இயங்குவதாலும், அதிகமான போக்குவரத்திலிருந்து வரும் நச்சுப் புகையாலும் காற்று மாசடைகின்றது.
விளைவுகள்:
காற்று மாசினால் கண் எரிச்சல், நுரையீரல் புற்றுநோய், இளைப்புநோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. மேலும் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைகிறது. ஓசோன் படலம் பாதிப்படைந்துள்ளதால் புறஊதாக் கதிர்களின் தாக்கம் அதிகமாகிறது. காற்றில் கலந்துவிடும் கந்தக டை ஆக்சைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு ஆகியவை மழைநீரில் கரைந்து அமில மழையாக மாறி மண், நீர், காடுகள், உயிரினங்கள், மனிதர்கள் ஆகியவற்றிற்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
முடிவுரை:
ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15 ஆம் நாள் காற்று நாளாகக் கொண்டாடும் நாம், காற்றை மாசுபடுத்தாமல் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை அறிந்துகொள்வோம். தூய்மையான காற்றைச் சுவாசித்து நீண்ட நெடுநாள் நோயின்றி வாழ்ந்திடுவோம்.

சிறுவினா

2. 1. வான்மழை நான்
   2. நானின்றி உலகில்லை
   3. வேளாண்மைக்கு முதல்வன் நான்.
   4. நான் இன்றி உயிரினம் இல்லை.
   5. அணைக்குள் இருந்தாலும் நானே அரசியலும் ஆவேன்.
   6. என்னைத் தூய்மையாக்கி உன்னைக் காத்துக்கொள்.
3. (i) உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கிறது.
   (ii) தாவரங்கள் ஒளிச்சேர்க்கை மூலம் உணவை உற்பத்தி செய்ய உதவுகிறது.
   (iii) விதைகளைப் பல இடங்களுக்குப் பரப்புகிறது.
   (iv) உயிர்ச் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறது.
   (v) நவீன தொலைத்தொடர்பின் மையமாக விளங்குகிறது.
   (vi) காற்றாலை மூலம் மின்னாற்றலைப் பெறுகிறோம்.

குறுவினா

4. (i) காற்று
   (ii) தென்றல்
   (iii) சூறாவளி
   (iv) வளி
   (v) புயல்
5. காற்றில் கலந்து விடும் கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்சைடு ஆகியவை மழை பெய்யும்போது நீரில் கரைந்து விடுவதால் அமில மழை பெய்கிறது.
6. 1. மரங்களை நடுவோம்; வளி, நீர் காப்போம்!
   2. கண்டவற்றை எரிக்காதே, காற்றை மாசுபடுத்தாதே!